# கிருபையுள்ள வார்த்தை ®

GRACIOUS WORD Luke 4:22

Vol - 15 March மார்ச் 2014

ஆண்டு சந்தா ரூ. 100/- தனிப் பிரதி ரூ. 9/- வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் Betty Choate ஆசிரியர் PCPR

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| மனந்திரும்புதல் | 3 |
| நம் தகப்பனாகிய ... | 12 |
| யோபுவின் சரிதை | 16 |
| பரிசுத்த ஆவி, அன்றும்... | 23 |
| வாலிப பிராயத்தில்.... | 26 |


*In memory of*
J.C. CHOATE


ஆசிரியர் குழு

*Guest Editors :* **BETTY CHOATE**
**JERRY & PAULA BATES**

**Editor : PCPR**

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.



World Literature Publication
Post Box No. 15, Arasaradi,
Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**

**"மனந்திரும்பியவருக்கு மறுவாழ்வு தரும் மகத்தான வார்த்தை"**

## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

பாருங்கள்!



பயன் அடையுங்கள்

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை - 6.45
வெள்ளி காலை - 6.00

செய்தியாளர் :
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

## சிறப்பு கூட்டங்கள்

மார்ச் 13 - ஆத்தும ஆதாய வீரர்களுக்கான சிறப்பு பயிற்சி
செய்தியாளர் சகோ. **Jerry Bates**

மார்ச் 14 - சகோதரிகளுக்கான சிறப்புக் கூட்டம்
செய்தியாளர் சகோதரி. **Paula Bates**




Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.78

# மனந்திரும்புதல்

**லூக்கா 15:11-21**



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே! எங்குமுள்ள மனிதரெல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிற ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயராலே உங்களை வாழ்த்தி இவ்விதழ் வழியாக சந்திப்பதிலே மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து தனது ஊழிய பயணத்தை துவக்கியபோது பயன்படுத்திய முதல் வார்த்தை "மனந்திரும்புங்கள் பரலோகராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது" ( மத் 4:17 ). இந்த வார்த்தை மிகவும் வலிமையான ஒன்று. இதனை செயல்படுத்தும் பட்சத்தில் மிகவும் வல்லமையுள்ள ஒன்றாகிவிடுகிறது. ஆண்டவர் மனுக்குலத்திற்கு கொடுத்த முதல் அறைகூவல், முதல் அழைப்பு இந்த வார்த்தை. ஒருவர் கிறிஸ்துவின் சீடராக மாறுவதற்கு இது அடைப்படையான வார்த்தையும் கூட. இவ்வளவு முக்கியமான,அவசியமான இந்த "மனந்திரும்புதல்" என்ற வார்த்தையை நாம் தலைப்பாக கொண்டு இந்த மாதம் தியானம் செய்யலாம்.

இன்றைய நவீன உலகில் அநேகர் மனந்திரும்புதலை பற்றி சிந்திக்கவோ, பேசவோ விரும்புவதில்லை. சிலர் "என்னை குற்றவாளி (அல்லது) தவறு செய்ததாக உணர வைக்காதே" என்று சொல்கின்றனர். 'எங்களுக்கு ஏற்கனவே போதிய பிரச்சனை உண்டு. இதற்கு மேலும் இன்னொரு காரியமா?' என்கின்றனர். அன்பானவர்களே ! பிரச்சனைகளுக்கும் மனந்திரும்புவதற்கும் இடையில் சம்பந்தம் இருப்பதை ஜனங்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. பாவிகள் மனந்திரும்பாதவரை பிரச்சனைகளை சரி செய்யவே முடியாது.

## 1. மனந்திரும்புதல் என்பதின் பொருள்:

மனந்திரும்புதல் என்பதை மக்கள் தவறாக புரிந்துக்கொள்கின்றனர். சிலர் கொஞ்சம் அழுது கண்ணீர் சிந்துவது மட்டும் மனந்திரும்புதல் என நினைக்கின்றனர். அல்லது வேறு சிலர் 'முன்பை விட நான் எவ்வளவோ மாறிவிட்டேன்' என்று கூறுவதினை மனம் திரும்புதல் என்று நினைக்கின்றனர்.ஒருவர் தவறு செய்து பிடிபட்டுக்கொண்டுவிடுவது மட்டும் மனந்திரும்புதல் அல்ல.

உதாரணமாக, நம்மில் சிலர் தவறு செய்துவிட்டு தண்டனை பெற்றால்

அவமானம்; உலகமே என்னை மதிக்காது என்று தண்டனை பெறாமல் தப்பிக்க எல்லா முயற்சியும் செய்கிறோம். இது உலக பாணி. இதனால் நாம் உலகில் மதிப்பு பெறலாம். ஆனால், பரலோக தேவனுடைய கணக்குப் புத்தகத்தில் நாம் குற்றவாளி தான்.

பிரியமானவர்களே! பைபிள் சொல்லும் மனம்திரும்புதல் என்பது வேறு. தப்பு செய்தால் அதை ஒத்துக்கெண்டு, தண்டனையும் பெற்று, மனம் வருந்தி அந்த செயலை வாழ்வின் கடைசி வரை செய்யாமல் இருக்க முடிவு செய்து, தவறை முழுமையாக விட்டுவிட்டு, அதற்கு எதிர் திசையில் செல்வது தான் பைபிள் படியான மனந்திரும்புதல். அதாவது தவறுக்கு எதிரான சரியானதை மட்டும் செய்வது மனந்திரும்புதல் ஆகும்.

**2. முழுமையான மனந்திரும்புதலின் துவக்கமும் தொடர்ச்சியும்:-**

மனந்திரும்புதலின் ஆரம்பம் அநேகரிடம் இல்லையெனலாம். ஆதாமும் ஏவாளும் தங்கள் தவறை புரிந்து கொண்டு வெட்கப்பட்டு ஒளிந்துக்கொண்டனர். தங்கள் தவறை புரிந்துக் கொண்டு ஆனாலும், மனம் திரும்பவில்லை. மனந்திரும்பி, செய்த தவறுக்கு, (பாவத்திற்கு) எதிராக புதிய வழியில் செயல்படவில்லை (ஆதி 3:1-10).

பாவம் என்று புரிந்து, மனம் கசந்து, வருந்தி அழுது, மன்னிப்பு கேட்கிறோம். இது முழுமையான மனந்திரும்புதல் அல்ல. அந்த பாவத்திற்கு எதிரான பரிசுத்த செயல்களை செய்வது தான் முழுமையான மனந்திரும்புதல். பவுல் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். கலா 1:23-24ல் ''முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதை மாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து, என்னைப் பற்றித் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.'' கிறிஸ்துவிற்கு எதிராக ஓடியவன், கிறிஸ்துவுக்காக ஓடினான்.

தவறு செய்து மன்னிப்பு (Sorry) கேட்டோமே, அந்த செயலை, இனி என்றுமே செய்யாமல் இருப்பதுவே மனந்திரும்புதலின் புது துவக்கமாகும். அத்துடன் நில்லாமல் எதற்காக மன்னிப்பு கேட்டோமோ, அதற்கு எதிரான சரியானதை (பரிசுத்தமானதை) செய்வது தான் பைபிள் கூறும்

என்னிடம்
உண்மையான
மனம்திரும்புதல்
இருந்தால், தேவன் தருவது
சிலுவையானாலும்
ஏற்றுக்கொள்வேன்.



முழுமையான மனந்திரும்புதல் ஆகும். சுருங்க சொன்னால், "மனந்திரும்புதல்" என்பது புதிய மனதுடன் (இருதயத்ததுடன்) நேர்மையான உருமாற்றத்திற்கான அடிப்படையாகும்.

**3. அ) மாறிய மனது (புத்தி):-**

லூக்கா 15:17ல் "அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது; நானோ பசியினால் சாகிறேன்.'' என்று வாசிக்கிறோம். மனந்திரும்புதல் என்பது உணர்ச்சிவயப்படகூடியது. ஆனால், முதலில் பகுத்தறிவு ரீதியானது.

மனந்திரும்புதல் என்பது இரண்டாவது மனது ஆகும். ஆனால் திடமான மனது ஆகும். பாவிகள், (துவறு செய்தவர்கள்) முழுமையாக சத்தியம் என்னும் வீடு திரும்ப வேண்டும். தவறு, பொய் வழிக்கு போன நிலையாகும். என்பது சத்தியத்தை விட்டு தூரம்போய்விட்ட நிலை அல்லது பொய் வழிக்கு போன நிலையாகும். பாவம் பேரழிவை உண்டாக்கும். அப்படிப்பட்ட பாவத்தில் இருந்து, பாவ சிந்தனைகளில் இருந்து மேம்பட்ட நிலை அல்ல மனந்திரும்புதல். மாறாக மனந்திரும்புவது என்பது அறிவுப்பூர்வமாக, நேர்மையாக மாறிவிடுவது தான்.

உதாரணமாக விமானத்தை ஓட்டும் விமானி அவசர உதவி கேட்கையில், 180 டிகிரி போகும் திசையிலிருந்து மாறி,எதிர்புறம் போக துவங்கி, போய் சேர்ந்துவிடுவது என்பது மனந்திரும்புதலை பற்றிய சரியான உதாரணமாக இருக்கக்கூடும்.

மேலும் மனந்திரும்புதலின் தருணம், கடவுள் மோசமானவர் என்பதால் அல்ல, மாறாக அவர் நல்லவரும், கிருபையுள்ளவருமாய் இருக்கிறபடியால் நமக்கு கிடைக்கிறது (ரோமர் 2:4; 2 கொரி 7:9-10).

மனிதர்களுக்கு ஏற்படும் கேன்சர் (புற்றுநோய்), அவமானங்கள், மன உளைச்சல்கள், சோகம், துயரங்கள், ஆகிய இவைகளுக்கு பின்பும் கூட, ஏன் அவர்கள் மனந்திரும்புவதில்லை?. உண்மையான விளைவுகள் நம் கவனத்தை ஈர்க்கும். நாம் செய்த பாவம் ஒருபோதும் மனந்திரும்புதலை உண்டாக்காது. ரோமர் 1:16ல் மாறாக வேத வசனமே அதற்கு உதவும் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது வேதபெலனாயிருக்கிறது.'' என்ற வாசிக்கிறோம். நற்செய்தி மட்டுமே மனிதர்களை இரட்சிக்க (விடுதலை கொடுக்க) வல்லமை உள்ளதாக இருக்கிறது. நற்செய்தியை

சொல்லுங்கள்; இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று கூறுங்கள் (1 கொரி 1:17). தேவனுடைய நற்தன்மை, அவரின் கிருபை இதற்கு உதவுகிறது (யோவா 3:14-17).

மனந்திரும்புதல் கடவுள் ஏற்படுத்தக்கூடும். மனந்திரும்புதல் என்பது ஒரு மரம் வேரோடு பிடுங்கப்பட்ட நிலையைப் போன்றதாகும். அதில் மரம், வேர், கொஞ்சம் மண்கூட வெளியே வந்துவிடும். இப்படிப்பட்டதுதான் பாவியின் மனந்திரும்புதல்.

மனந்திரும்புதலில் ஏதோ கொஞ்சம் மட்டும் பழைய பாவ நிலையை மறைத்து வைப்பது அல்ல, மாறாக முழுவதும் புதிய வாழ்வு. இனிமேல் எதற்குமே குற்றப்படுத்தும் குணம் இல்லவே இல்லை. இதுதான் சுவிசேஷத்தின் (ரோ 1:16) வல்லமை.

மனிதன் தன் நிலையை தனக்கு தானே ஏற்றுக்கொள்ளாதவரை தன்னை மாற்றவே முடியாது.

kde;jpUk;Gjy;
vdgJ Gjpa kdJld;
,Ujaj;jJld;
Neh;ika kahd
cUkhwwj;jpw;fhd
mbggilahFk;



மனந்திரும்புதல் என்பது புணரமைப்பது சீர்திருத்துவது, அல்லது பிழைதிருத்தல் அல்ல. மாறாக, முற்றிலும் புதிதாக ஆரம்பிப்பது. அதை பவுல் “நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும் படிக்கு’’ மனந்திரும்பி, திருமுழுக்கு பெற்றோம் (ரோமர் 6:3-4) என்கிறார். ஆகவே தான் இரட்சிப்புக்கு ரோமர் 10:9-10ன் படி, விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். ஆகையால் தான் எத்தியோப்பிய மந்திரி அப் 8:37ல், “இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி’’ என்று விசுவாசத்தினை அறிக்கையிட்டு திருமுழுக்கு பெற்றார். ஏனெனில் இரட்சிக்கப்பட ‘பாவத்தை’ அறிக்கையிடுவது பைபிள் முறையல்ல.

மாறாக, 1 யோவான் 1:7-9 “அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்தகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும்

உள்ளவராயிருக்கிறார்". கடந்த கால பாவத்திலிருந்து மனந்திரும்பி விசுவாசத்தை அறிக்கையிட்டு பாவமனினப்பிற்கென்று திருமுழுக்கு பெற்று (மாற் 16:16, அப் 2:38) இரட்சிப்பையும் பரிசுத்த ஆவியையும் பெற்று கிறிஸ்தவர்களாக இப்பூமியில் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது பாவம் செய்தால், அந்த பாவங்களைத்தான் நாம் அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும்.

**ஆ) மாறிய மனது (இருதயதம்):-**

லூக்கா 15: 18,19,21ல் "நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்; தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; குமாரன் தகப்பனை நோக்கி: 'தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல' என்று சொன்னான்." இந்த இளைய மகன் தன்னிலைக்கு வந்தான். தானாகவே அறிக்கையிட விரும்பினான். தன் தகப்பன் வீட்டுக்கு திரும்பி வருவதற்கு, அவன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தபோது எப்படி இருந்தானோ, அப்படியே புத்தம் புதிய ஒரு வாழ்வை ஆரம்பிக்க ஆவல் கொண்டான். தன்னை தானே அடக்க கற்றுக்கொண்டான்.

நம்மில் சிலர் இரட்சிப்பை பெறுவதற்கு பதில் வியாபார ஒப்பந்தம் போடுகிறோம். கடவுளுக்கு கண்டிசன் போட்டால், அதற்கு பெயர் மனந்திரும்புதல் இல்லை; அது வியாபார ஒப்பந்தம். வேலை கிடைத்தால், நோய் சுகமானால், கஷ்டம் தீர்ந்துவிட்டால், திருமுழுக்கு பெறுவேன்; சபைக்கு வருவேன்; ஜெபிப்பேன்; பைபிள் படிப்பேன்; ஊழியம் செய்வேன்; என்பது எவ்வளவு வேடிக்கையானது.

நான் யார்? அவர் யார்? என்னையும், என் கீழான நிலையும் உணர்ந்து மனந்திரும்பியிருந்தால் அவரிடம் Demand பண்ணுவேனா? அப்படி நினைக்கத்தான் முடியுமா? நீதிபதிக்கு குற்றவாளி நிபந்தனை விதிக்க முடியுமா? என யோசித்து பாருங்கள். மேலும் கடவுள் என்னை மன்னிக்க, உயர்த்த, மதிக்க, மாற்ற தயாராக உள்ளார். ஆனால் இதை எல்லாம் எதிர்பார்த்து அவரிடம் வருவதற்கு நான் யார்? இப்படி கண்டிசன் போட்டு வந்தால், அது மனந்திரும்புதல் அல்ல.

மனந்திரும்பிய மகன் அப்பாவிடம் உட்கார்ந்து பேசவில்லை. மாறாக, மண்டியிடுகிறான். வியாபார ஒப்பந்தம் (Business Deal) பண்ணாமல், அடிமை சாசனம் (Slavery note) எழுதித்தருகிறான். மனந்திரும்பினால்

அடிமை குணம் இருக்க வேண்டும். மேலும், இயேசு என்னைப் பார்த்து, 'என்ன? ஏதாவது வேண்டுமா?' என்று கேட்டால், 'எல்லாம் உங்கள் விருப்பம் இயேசுவே' என்று சொல்வேன். அதில் நடிப்பு இருக்காது.

ஆம்! இது தான் கெத்சமனே ஜெபம். எனக்கு முடியவில்லை, ஆனால் உம்சித்தம். சிலுவைக்கு நான் ரெடி என்றார், ஆண்டவர் இயேசு. என் வியாதி, கடன், பிரச்சனை, கோர்ட் கேஸ் மாறினால் தோத்திரம் கடவுளே என்பதல்ல; மாறாக, 'இதை தாங்கிக்கொண்டு உம் சித்தம் செய்ய வழிநடத்தும்; அதற்காக நன்றி' என்பது தான் உண்மையான மனந்திரும்புதல். குடும்ப உறவுகளில் இது இருந்தால் மட்டும் வெற்றி உண்டு. ஒருவருக்கொருவர் மன்னிக்கையில், மன்னிப்பு பெறுகையில், மனந்திரும்புதலை காட்ட வேண்டும். மனந்திரும்பும் முன், மன்னிக்கப்படும் முன் அல்லது இருந்த உரிமையை கோரக்கூடாது. மாறாக, சிலுவையை தூக்க வேண்டும். மனந்திரும்பிய பவுல் கிறிஸ்தவர்களை தண்டித்து, அவர்களுக்கு நஷ்டம் உண்டாக்கியவன். அவைகளை நிறுத்திவிட்டு, தானாக வழிய போய் கிறிஸ்துவிற்காக நஷ்டப்படுகிறவனாக, கஷ்டப்படுகிறவனாக மாறினார். இது தான் உண்மையான மனந்திரும்புதல்.

kde;jpUk;Gjy;
vdgJ ,uz;lhtJ
kdJ MFk; Mdhy;
jpIkhd kdJ MFk;



மனந்திரும்பியவர்களை கடவுள் ஆசீர்வதிக்கிறார்; உயர்த்துகிறார்; உச்சத்திற்கு கொண்டு போகிறார். ஆனால் அவர்களோ, எதையும் அனுபவிக்க உரிமையிருந்தாலும் சபை வளர, சுவிசேஷம் சொல்ல, வழியப்போய் உலக ஆதாயத்தை இழப்பார்கள். லூக்கா 15:20, "எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்." மூத்தவனை போல வாழ வரவில்லை, மாறாக மாறியதை காட்ட வந்தான்.

உரிமைக்கோர அல்ல, அடிமை போல உழைக்க வந்தேன் என்கிறான். இங்கு கலப்படமற்ற கிருபை இயங்குகிறது, லூக்கா 15:21ல் "குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரேதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்" என்று வாசிக்கிறோம். அந்த அப்பாவிற்கோ அடிமையல்ல, மகன்தான் வேண்டும். முழுமையாக மாறிய மகனுக்கு அப்பா தரும் வாழ்க்கை இது. ஆனால், மகன் உரிமைக்கோரவில்லை.

சபையில் பிரசங்கம் கேட்கையில், பைபிள் ஸ்டடி நேரத்தில் நம் பாவம் உணர்த்தப்பட்டு, கடவுளிடம் Bussines deal பண்ணாமல், மாறாக, கிருபை கேட்டால், அவருடைய அளவற்ற கிருபையை பெறலாம். மாறாக என்னை ஆசீர்வாதித்தால் 40 நாள் இப்படி இருப்பேன், சம்பளத்தில் இவ்வளவு தருவேன் என கூறுவதா மனந்திரும்புதல் என யோசிப்போம்.

சங் 51ல் தாவீது, தான் செய்த பாவத்தினை அறிக்கையிட்டு, மன்னிப்பு கேட்கிறார். அவன் ஜெபித்த ஜெபத்திற்கு அவனது விருப்பத்தின்படியே கிடைக்கவில்லை என்ற போதும், தேவன் தனது பாவத்திற்கு தந்த இழப்பை முறுமுறுக்காமல் ஏற்று, தன்னை மாற்றிக்கொண்டார். இதன் விளைவு, கிறிஸ்து அவன் சந்ததியில் வந்தார். என்னிடம் உண்மையான மனம்திரும்புதல் இருந்தால் தேவன் தருவது சிலுவையானாலும் ஏற்றுக்கொள்வேன். அனுதினம் சிலுவை ஏற்று நடப்பது தான் எனக்கான அவரின் அறைகூவல் என உணர்வேன். அதை விட்டுவிட்டு 'நீங்கள் பிரசங்கம் செய்து என்னை மாற்ற முயற்சிக்க வேண்டாம்; நானாக மாறுவேன்' என்று கூறுவதல்ல மனந்திரும்புதல். தேவனுடைய வார்த்தையால் தான் என்னை மாற்றமுடியும். ஆகையால் அதற்கு என்னை நான் முழுமையாக ஒப்புகொடுப்பது தான் மனந்திரும்புதல்.

மனந்திரும்புதல் என்பது, கடவுளின் கொள்கையில் கருத்தாழமிக்க அறிவின் நிமித்தம் உண்டாகும் செயல் விளைவு ஆகும். **மனந்திரும்புவதில் உங்கள் திறமையை மகிமைப்படுத்தாதபடி எச்சரிக்கையாக இருங்கள்.** மனந்திரும்புதல் என்பது திட்டமிடப்படாதது; ஆயினும், உடனே அப்படியே எதிர்புறம் மாறுவது. திட்டமிட்டு கொஞ்சம் கொஞ்சமாக திருந்துவது திறமை. பயிற்சியினால் மாற்றுவது திறமை. மாறாக கெட்டதை உடனே முழுவதும்விட்டு, நிறுத்திவிட்டு, அதற்கு எதிரே நல்லதை மட்டும் செய்ய பயிற்சி செய்வது தான் வேதாகமம் கூறும் மனந்திரும்புதல். இங்கே மனந்திரும்பிய மகன், கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துவிட்டு பிறகு வரவில்லை. மாறாக, நல்லதை மட்டும் செய்ய முழுமையாக மாறி வந்தான். நீங்களும் மனந்திரும்பினால், முழுமையாக பாவத்தின் எதிர்பக்கம் வாருங்கள்.

மனந்திரும்புதலை நாம் கட்டுப்படுத்த முடியாது. மாறாக, மனந்திரும்புதல் நம்மை கட்டுபடுத்தும். (விமானி விமானத்தில் ஆபத்து வந்தால் செய்வது போல செயல்படுவது). யாராவது நம்மைப்பார்த்து 'பாவி மனந்திரும்பு' என்று பிரசங்கித்தால் யோவான் ஸ்நானகனின் தலையை கொன்ற நமக்கு ஏரோதுவைப் போல மிகக் கோபம் வருகிறது.

இயேசுவிடம் சென்று நித்திய ஜீவனுக்கான வழி கேட்டும், அதனை செயல்படுத்தாமல் சென்ற பெருமைக்காரனால், மனந்திரும்ப முடியவில்லை. ஒருவர் தன்னுடைய செயல்திறன் காட்டி, தன்னை தானே காப்பாற்ற முடியுமானால் அவருக்கு இரட்சகர் தேவையில்லையே. 'பாவ பழக்கத்தை நிறுத்திவிட்டு திருமுழுக்கு பெறுவேன்' என்போரே கவனம்! பாவமன்னிப்பு பெற்று, பரிசுத்த செயல் செய்ய, தேவனிடம் பயிற்சி பெற, சபைக்கு வாருங்கள் (2கொரி 5:17). ஏனெனில், மனந்திரும்புதலில் நேர்மை தான் கட்டுப்படுத்தும்.

மனிதனே! நீ என்ன செய்யனும் என்று சொல்லும் முன், கடவுள் உனக்கு என்ன செய்வார் என்று சொல். நான் சட்டத்திற்கு கீழ்படிய திருமுழுக்கு பெறவில்லை; மாறாக, தேவகிருபை என்னை மனந்திரும்ப வைத்ததால் திருமுழுக்கில் கீழ்படிந்தேன், இரட்சிக்கப்பட்டடேன்" என்று கூறுங்கள். மனந்திரும்புதலை உண்மையிலே நீங்கள் செய்திருந்தால் இரட்சிப்பு சபையில் இருக்கிறது என்று சத்தமிட்டு சொல்லுங்கள்.



வாசகர்களே !
இச்செய்தி
உங்களிடம் ஏற்படுத்திய
தாக்கத்தை அறிய
விரும்புகிறேன்.
– ஆசிரியர்

ஆத்தும ஆதாய வேலையை செய்யாத எந்த கிறிஸ்தவ ஆணும் பெண்ணும் மனந்திருந்திய மைந்தனை போல வராதவர்கள். அவர்கள் அடிமை என்ற எண்ணத்தில் வீட்டிற்கு (சபைக்கு) வரவில்லை. எனவே தான் ஆத்தும ஆதாய வேலை செய்யனும் என்ற (வேலைக்காரனாயிருக்க) எண்ணமே அவர்களுக்கு இல்லை. அல்லது வீட்டுக்குள்ளே இருந்த மூத்தவனைப் போல வெட்கப்படுகிறோமே? அல்லது, சொந்த வேலை (உலக படிப்பு, வருமானம் பெற) செய்யவே நேரம் இல்லை என்கிறோமே?.சகோதரனே, சகோதரியே நாம் மனந்திரும்புதலின் கனிகளை கொடுக்க வேண்டும்.

பாவமன்னிப்பை திருமுழுக்கிலே பெற வந்த பொழுது இருந்த தாழ்மையின் சின்னம் நமக்கு மோதிரமும், இரட்சிப்பின் வஸ்திரமும் பெற்று வீட்டிற்குள்ளே (சபைக்குள்ளே) வந்த பின்பு இல்லையோ? பாவிகளில் பிரதான பாவி என்று எப்பொழுதும் நினைத்த பவுல் ஆத்தும ஆதாயம் செய்தான். உங்கள் சொந்த பணத்தினை செலவழித்து, 1 நாளில் 1, நபருக்கு, 1 கைபிரதி, 1 நிமிடம் செலவிட்டு, இயேசு மட்டுமே இரட்சகர் என்று தினமும் சத்தமிட்டு சொல்லுங்கள். 6 மாதத்திற்கு ஒரு முறையாவது ஒருவரை இரட்சிப்பிற்குள்ளே (அப் 22: 16) வழி நடத்துங்கள். மாதம் 10 பேருக்கு பைபிள் பாடம் அறிமுகம் செய்யுங்கள்; TV நிகழ்ச்சி நேரத்திலே உன் மொபைல்

போனை பயன்படுத்தி, 10 பேரையாவது அழைத்து, தேவ செய்தி கேட்கவைத்து அவர்கள் ஆத்துமாவை பெலப்படுத்துங்கள்.

**இ) மாறிய வெளித்தோற்றம்**

கடவுள் பாவத்தை வெறுக்கிறார். பாவம் கடவுளிடமிருந்தும், சக மனிதர்களிடமிருந்தும் மனிதனை பிரித்து தனிமைபடுத்துகிறது (ஏசாயா 59:1-2). பாவம் கடவுளின் இதயத்தை உடைக்கிறது (ஆதி 6:6,7). பாவம் 100க்கு 100 சதவீதம் கடவுளுக்கு விரோதமானது. இதை கேட்கையில் நம் மனம் உடைய வேண்டும். ஏனெனில், பாவம் மனிதனின் எதிரி மற்றும் துரோகி. பாவத்தை வெறுக்க வேண்டியது, மிக கட்டாயமானது. மேலும், உடனே மனந்திரும்பவும் வேண்டும். ஆகையால் பாவத்தை தைரியமாய் புறக்கணியுங்கள்.

மனந்திரும்புதல் என்பது கடவுளிடம் செய்யும் பொருத்தனை போன்றது. தேவன் எப்படி பார்பாரோ அப்படி பாருங்கள். கடவுள் தரும் மாற்று, சிலுவையாகும். எனவே நாமும் மனந்திரும்புதலை அப்படிப்போல பார்ப்போம். மனந்திரும்புதல் என்பது அதை (சிலுவை) நோக்கி திரும்பி, அதற்காகவே திரும்புவதுமாகும்.

ஒவ்வொரு ஞாயிறும் தற்போதைய சபையானது, பாவிகளால் நிறைந்த கூட்டமாக உள்ளது.இவர்கள் உலகம், பாவம், மட்டமானவைகள், கசப்புணர்வுகள், ஆபாசமானவைகள், அழிவுக்குரியவைகள் ஆகியவற்றிலிருந்து மனந்திரும்ப வேண்டியவர்கள். இவர்கள் கடவுளுடன் சரி பொருந்தாதவர்கள்; பிறருடன் சரி பொருந்தாதவர்கள். தன்னில் காணும் தவறை அறிந்தும், உணர்ந்தும் தன்னை மாற்றிக்கொள்ளாததற்கு காரணம் சொல்லும் நபர்கள். இப்படிபட்டவர்களால் சபை கூடங்கள், கூட்டமாக நிறைந்துள்ளது. தேவனுக்கு எவ்வளவு வேதனையை உண்டாக்கும் என்று சிந்தித்து பாருங்கள். முற்றிலுமாக எதிர்பழக்கங்களால் தகப்பனுடைய வீடு வந்து சேர்ந்துவிடுபவர்களே மனதிரும்பியவர்கள் ஆவார்கள். மனந்திரும்புதல் சிந்தனையில் மட்டுமல்ல செயலும் காண்பிக்கப்பட் வேண்டும்.

நமது உண்மையான மனம் திரும்புதல் மூலம், பிறரும் கடவுளிடம் மனந்திரும்பி மாறி செயல்பட, தினமும் யாருக்காவது சொல்லுவோம். சாத்தானின் திட்டத்தினை வெல்லுவோம். 1 நாள், 1 கைபிரதடி 1 நபருக்கு 1 நிமிடம் செலவு செய்துக் கொடுப்போம். மனந்திரும்புதலின் கனிகளை கொடுப்போம். நம் பரமபிதாவை மகிமைப்டுத்துவோம். ஆமென்!

– உங்கள் சகோதரன்,

**PCPR** (ஆசிரியர்)

சிறப்பு செய்தி

# நம் தகப்பனாகிய ஆபிரகாமின் விசுவாசம்

## The Faith of Father Abraham



Jerry Bates

இன்றைய மத உலகில் விசுவாசத்தைப் பற்றி நிறைய விஷயங்களை கேள்விப்படுகின்றோம். அதில் அநேகர் நம்பக்கூடியது என்னவெனில், ஒருவர் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிக்கப்படுகிறார் என்பதே! மேலும் அநேகர் தங்களுக்கு விசுவாசம் இருப்பதாக கூறுவார்கள். ரோமர் 4-ம் அதிகாரத்தில் பவுல், ஒரு மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமெனில் அவருக்கு இருக்க வேண்டிய விசுவாசத்தைப் பற்றி பவுல் கூறுகிறார்; ஆனால், அதை அவர் ஒரு தத்து விளக்கமாக பயன்படுத்தாமல், ஆபிரகாமை ஒரு உதாரணமாக (முன் மாதிரி) பயன்படுத்தி விளக்குகிறார். ரோமர் 4:12 ல் பவுல் எழுதுகையில், ஆபிரகாமை, விருத்தசேதனம் பெற்றவர்கட்கும் பெறாதவர்கட்கும் தகப்பனாக எழுதுகிறார்; அதாவது யூதர்கட்கும், புறஜாதிகட்கும் தகப்பனாக. (ரோ 4:12). பவுல், ஆபிரகாமை நம்முடைய முன்மாதிரியாக நாம் பார்க்கும் படி விரும்புகிறார். நமக்கும் ஆபிரகாமிற்கு இருந்த அதே விசுவாசம் இருக்குமானால் நாமும் விசுவாசத்தினாலே இரட்சிப்படைய முடியும். அதாவது, ஆபிரகாம் செய்த அதே காரியங்களை நாம் செய்ய வேண்டிய அவசியமில்லை; மாறாக, அவருக்கு இருந்த அதே விசுவாசம் நமக்கு இருக்க வேண்டும். **முதலாவது** நாம் கவனிப்பது என்னவெனில் ஆபிரகாமின் விசுவாசம் தேவனில் இருந்தது ரோ-4:17 ல் தேவனைப் பற்றி அவர் நம்பியது என்னவென்று பாருங்கள். "மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்" என்று ஆபிரகாம் தேவனைப் பற்றி நம்பினார். ஆபிரகாமின் விசுவாசம் சுயசார்பானதோ, பூமிக்குரிய சாத்தியக்கூறுகளை சார்ந்ததாகவோ இருக்கவில்லை. தேவனால் உயிரற்றவற்றிக்கு உயிர்கொடுக்க முடியும் என்று, தனக்கும் சாராளுக்கும் பிள்ளை பெறும் வயது சென்ற பின் ஈசாக்கினுடைய இயற்கைக்கு மாறான பிறப்பைப் பற்றி அவர் அப்படி நம்பினார். நமக்கு தெரிந்த வரை, அப்படி ஒருகாரியம் நடந்ததையோ, அல்லது அதைப்போன்ற வேறொரு

அதிசயத்தையோ ஆபிரகாம் தன் வாழ்நாளில் பார்த்ததாக நமக்குத் தெரியாது.

ஆனாலும் ஆபிரகாம், தான் ஒரு பெரிய தேசத்தின் தகப்பனாக மாறப்போகிறார் என்று நம்பினார். அப்படி அவர் நம்புவதற்கு வேறு ஒரு காரணமும் இல்லை; தேவன் அவரிடம் வாக்கு கொடுத்தது மட்டுமே காரணம். தேவன் ஒரு காரியம் நடக்கும் என்று கூறினால், அது அப்படியே நடக்கும் – கேள்விக்கு இடமில்லாமல். ஆபிரகாமின் விசுவாசம் பூரணமானது கிடையாது; மாறாக, அவர் யார் மீது விசுவாசம் வைத்திருந்தாரோ, அந்த தேவன் பூரணமானவர்.

உங்கள் விசுவாசம் எதில் உள்ளது? நான் ஏற்கனவே கூறியது போல, அநேகர் தங்களுக்கு விசுவாசம் உண்டு என்று கூறுகின்றனர்; ஆனால் அந்த விசுவாசம் எதில் உள்ளது? சிலர்



தேவன் ஒரு காரியம்
நடக்கும் என்று கூறினால்,
அது அப்படியே நடக்கும்,
கேள்விக்கு இடமில்லாமல்.

தங்களுடைய விசுவாசத்தை 'விசுவாசத்தில்' வைக்கின்றனர். அதாவது, இவை இன்றைய சுய உதவி புத்தகங்களை சார்ந்த விசுவாசம். சிலர் தங்களுடைய விசுவாசத்தை 'தங்கள் மீதே' வைக்கின்றனர் ; அதாவது அவர்கள் செய்தது மற்றும் செய்யாதவைகளின் மீது அவர்கள் நல்ல வாழ்க்கை வாழ்ந்ததினாலும், நல்லவர்களாக இருப்பதினாலும், அவர்கள் இரட்சிப்படைந்து விடுவோம் என உறுதியாக உள்ளனர். வேறு சிலர் தங்கள் விசுவாசத்தை ஏதாவது ஒரு மதத்தின்மீது வைக்கின்றனர். அவர்கள் தாங்கள் பின்பற்றும் மதத்திற்கு நேர்மையாக இருப்பதினால், அது போதுமானது என நினைக்கின்றனர். வேறு சிலர் தங்கள் விசுவாசத்தை ஒரு திட்டத்தின்மீது வைக்கின்றனர். ஏனெனில் அவர்கள் சில செயல்களை, அதாவது ஞானஸ்நானம் பெற்றதினாலோ (அல்லது) ஒவ்வொரு ஞாயினும் சபைக்கு செல்வதினாலோ, உறுதியாக பரலோகம் செல்லலாம் என அவர்கள் நம்புகின்றனர். நம்முடைய விசுவாசமோ தேவனில் இருக்க வேண்டும் ; அது அவருடைய குமாரனாகிய இயேசுவின் உயிர் தெழுதலையும் உள்ளடக்கும் (ரோ.4 : 24,25).

இரண்டாவதாக, ஆபிரகாமின் விசுவாசம் தேவ வல்லமையின் மீது இருந்ததை நாம் பார்க்கிறோம். “உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும் சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணுதிருந்தான்.'' என்று ரோமர்4:18,19ல் நாம் வாசிக்கின்றோம். பாருங்கள் ! ஆபிரகாம் கொண்டிருந்த நம்பிக்கை, நம்பிக்கைக்கே முரணாக இருந்தது. இது ஒரு முரண்பட்ட நிலையாக இருக்கிறதல்லவா ? அவரால் எப்படி நம்பிக்கையுடன், நம்பிக்கை இல்லாமலும் இருக்க முடியும் ? ஆபிரகாம் மிக நேர்த்தியாக ஒரு குழந்தையை விரும்பினார், ஆனால் சரீரப்பிரகாரமாக அது சாத்தியமே இல்லை என அவர் அறிந்திருந்தார். ஆனால், தேவன் அவரிடம் ஒரு குமாரன் பிறப்பார் என்று சொல்லியிருந்தார், அதினால் அவர் மிக உறுதியுடன் ஒரு மகனுக்காக காத்திருந்தார். அவருடைய நம்பிக்கையின் ஆதாரம் என்ன? வேறு ஒன்றுமே இல்லை, தேவனுடைய வல்லமையின் மீது அவருக்கு இருந்த விசுவாசம். சிலருக்கு இது சாத்தியமற்றது மற்றும் யதார்த்திற்கு மாறான ஒன்றாகும். கிறிஸ்தவர்கள் நிஜத்திற்கு புறம்பானதை நம்புகின்றனர் என அவர்கள் கூறலாம். சிலர் இதை கண்மூடித்தனமாக நம்பிக்கை எனவும் கூறலாம். தனக்குப் பிள்ளை பிறக்கும் வயது கடந்துவிட்டதை அவர் அறிந்திருந்தார். ஆபிரகாமிற்கு, தன்னுடைய மற்றும் தன் மனைவியின் (சாராள் ) சரீர நிலை தெரிந்திருந்தது ; ஆனாலும், அவருக்கு தேவனுடைய மகத்துவமும், வல்லமையும் நன்றாக தெரிந்திருந்தது.

தனக்கு சரீரப்பிரகாரமாக பிள்ளை பிறக்காது என அவருக்கு தெரியும், ஆனாலும் அவர் சாத்தியமற்றவைகளையெல்லாம் சாத்தியமாக்கக் கூடிய அந்த தேவனை அவர் நம்பினார் ( லூக் 1 : 37 ). உங்களுக்கு இப்படிப்பட்ட விசுவாசம் உண்டா? சிலர், பைபிளில் உள்ள அற்பதங்களையோ, இயேசுவின் உயிர்தெழுதலையோ, அவைகள் சாத்தியமற்றவைகளாக தோன்றுவதினால் நம்பமறுக்கின்றனர் ; ஆனாலும் அவர்கள் தேவனுக்கு முன்

சரியானவர்கள் என உரிமை கோருகின்றனர். அவர்களுடைய விசுவாசம் ஆபிரகாமின் விசுவாசத்தைப் போன்றதல்ல நாமும், வாழ்வின் பிரச்சனைகளை ஒதுக்கிவிடக் கூடாது ; ஆனாலும் அவைகளினால் தோற்கடிக்கப்படவோ, மேற்கொள்ளப்படவோ கூடாது. நம்முடைய தேவன் அவைகளுக்கு எல்லாம் மேலானவர். அநேகர் எல்லாவற்றையும் யகார்த்தமாக புரிந்துகொள்ள முடியாததினால், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவோ, ஞானஸ்நானம் பெறவோ மறுக்கின்றனர். மனித சாத்தியங்களுக்கு அப்பாற்பட்டதாயினும் ஆபிரகாம், தேவன் சொன்னதை விசுவாசித்தார்.

இறுதியாக, ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசம் வைத்திருந்ததை நாம் பார்க்கிறோம். ''தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.” (ரோ 4:20,21 ). சந்தேகப்படுதல் என்பது தயங்குதல் அல்லது உறுதியில்லாத நிலை ஆகும். ஆபிரகாமுக்கு தேவன் வாக்கு கொடுத்ததை செய்யமுடியும் என்றும், செய்வார் என்றும் தெரியும். ஆனால் இது ஆபிரகாமுக்கு கஷ்டமான ஒன்றுதான் ; ஏனெனில் ஈசாக்கு பிறப்பபான் என்று தேவன் அவரிடம் கூறியபின் சுமார் 25 ஆண்டுகள் அவர் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனாலும் அவர் ஒவ்வொரு ஆண்டின்பின் ஆண்டாக சுமார் 100 வயதுவரை மகன் பிறக்காவிட்டாலும், காத்திருக்க வேண்டியிருந்தது. இருப்பினும் ஆபிரகாம், தன் கண்களை தேவன் மீது இருந்து எடுக்கவே இல்லை. ஒருவேளை அவருக்கு இக்காலங்களில் சில கேள்விகள் இருந்திருக்கலாம், இருப்பினும் அவர் தேவனை சேவிப்பதை நிறுத்தவில்லை. அவர், தான் விரும்பியவாறு காரியங்கள் நடக்காவிட்டாலும் தேவனுக்கு தொடர்ந்து மகிமை செலுத்தினார். சிலர், தாங்கள் தேவனை அறிந்திருக்கிறோம் என்று கூறியும், அவருக்கு மகிமையை செலுத்தாதவர்களைப் போல அவர் இருக்கவில்லை (ரோ. 1:21).

**- சகோ. கிங்ஸ்லி (தமிழில்)**



kde;jUkGjy;
vdgJ Gzui kggJ›
rh;jUj;JtJ myyJ
gioj Uj;jy;myy. khwhf›
KwwYk;GjJhf MukgggJ.

# 13 எலிகூவின் தர்க்கம்



- சகோ. P.R. சாமி (பெங்களூரு)

கடந்த பாடத்தில் துன்மார்க்கர்களை கண்டு எரிச்சலடையக் கூடாது என்பதற்கு, யோபு கூறும் காரணங்களைப் படித்தோம். இந்தப் பாடத்தில் எலிகூ என்ற இளைஞன் கூறுவதைப் பற்றி படிப்போம்.

யோபுவும், அவனது மூன்று நண்பர்களும் பேசிய உரையாடலைக் கேட்ட பின்னர், எலிகூ தன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தலானான். முதலில், இதுவரைக்கும் தான் ஏன் பேசாமலிருந்தான் என்பதற்கு காரணம் கூறுகிறான். "நான் இளவயதுள்ளவன், நீங்களோ விருதாப்பியர். ஆகையால் நான் அஞ்சி என் அபிப்பிராயத்தை உங்களுக்கு முன்பாக வெளிப்படுத்த பயந்திருந்தேன். முதியோர் பேசட்டும், வயது சென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும் என்றிருந்தேன்'' என்றான் (யோபு 32:6,7).

அந்தப்படி ஒரு இளைஞன் வயதையும், ஞானத்தையும் மதித்து, இன்னும் கற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலிருப்பதை உணர வேண்டும். மௌனமாய் இருப்பதற்கு ஒரு காலமுண்டு, பேசுவதற்கு ஒரு காலமுண்டு ( பிர 3:7 ). சில வேளைகளில் மௌனம் நல்லது. ஆனால், பேசவேண்டிய சமயங்களில் மௌனமாயிருப்பது கோழைத்தனம். இவ்வளவு நேரமும் மௌனமாயிருந்து விட்டு, இப்பொழுது உள்ள உறைப்பினால் எலிகூ பேசத்தொடங்கினான். மனுஷன் முகத்தைப் பார்த்து இச்சகம் பேசுவதோ உண்மை என்று தெரிந்தும் பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருப்பதோ தவறு. இங்கு எலிகூ, யோபின் நண்பர்கள் அந்நாளைய பிரபல்யமானவர்கள் என்பதால் பயந்து பேசாமல் இருக்கவில்லை. தைரியமாக, ''நான் உங்கள் சொல்லைக் கவனித்தேன். ஆனாலும் இதோ, உங்களில் யோபுக்கு நியாயத்தைத் தெரியக்காட்டி அவருடைய வசனங்களுக்கு ஏற்ற பிரதியுத்ரம் சொல்லுகிறவனில்லை'' என்றான் (யோபு 32:12).

யோபுவும் கூட சில காரியங்களில், இன்னும் தெளிவான அறிவுரையைப் பெறவேண்டியவனாக இருப்பதை எலிகூ உணர்ந்தான். அவர்கள் பேச்சைக் கேட்டு எலிகூ எடுத்த முடிவு, ''பெரியோரெல்லாம் ஞானிகளல்ல. முதியோரெல்லாம் நீதியை அறிந்தவர்களுமல்ல" ( யோபு 32:9 ). எப்பொழுதும் வயதும் அனுபவமும் தான் ஞானத்தைக்கொண்டு வரும் என்று கூற முடியாது. இளைஞனோ, முதியவனோ ஞானமுடையவனாக மாறத்தக்க பக்குவம் மனிதனுக்கு உண்டு.

அப்படியானால் உண்மையில் யார்தான் ஞானி?

''கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி 1:7). எவன் ஒருவன் தேவனுடைய வார்த்தையை கேட்டு அதன்படி நடக்கிறானோ, அவனே ஞானி. அவன் இளைஞனானாலும் சரி, முதியவனானாலும் சரி. ஆகவே, எலிகூ தைரியமாக தன் உள்ளத்திலிருக்கும் உண்டையை கூறுகின்றான். யோபுவும் அவனது மூன்று நண்பர்களும் அதிகமாக தர்க்கம் பண்ணின காரியம்,நீதிமான்கள் மீதும் தேவன் எப்படி நியாயத்தைக் கொண்டு வருகிறார், எப்படிப்பட்ட நீதியோடு அவர்களை விசாரிக்கிறார் என்பதே. அதை அடிப்படையாகக் கொண்டு எலிகூ தன் பேச்சை துவங்குகிறான்.

தேவன் உன்னதமானவர்; அவர் தாம் செய்யும் காரியங்களுக்கு நமக்குக் காரணம் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இல்லை. நாம் தேவனுடைய உள்ளத்தின் ஆழத்தை அறிய முடியாது. அது ஒரு சமுத்திரத்தை எப்படி நம் உள்ளங்கையால் தாங்கக் கூடாதோ அதைப்போல ஒரு மனிதன் தேவனுடைய உள்ளத்தை புரிந்துக் கொள்ளமுடியாது. ஒரு சிறு குழந்தையும், தன் பெற்றோர்கள் கட்டளை கொடுக்கும்போது அதிலுள்ள ஞானத்தை புரிந்துகொள்ள முடியாது. ஆகவே எலிகூ கூறுனான். ''மனுஷனைப் பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கிறார். அவர் தம்முடைய செயல்கள் எல்லாவற்றையும் குறித்து காரணம் சொல்லவில்லை என்று நீர் அவரோடு ஏன் வழக்காடுகிறீர்? தேவன் ஒரு விசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்துத் திருந்துகிறவரல்லவே" (யோபு 33:12-14). தேவன் செய்யும் காரியங்கள் நீதியானவைகள். நமக்கு ஒன்றும் புத்திக்கு எட்டவில்லை என்ற காரணத்தால், அவரை குற்றஞ்சாட்ட முடியுமா? ''அவர் தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாக திருப்பினாராகில், அவனுடைய ஆவியையும் அவனுடைய சுவாசத்தையும் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளுவார். அப்படியே மாம்சமான யாவும் ஏகமாய் ஜீவனற்றுபோம். மனுஷன் தூளுக்கு திரும்புவான்" (யோபு 34:14,15).

சில சமயங்களில் மனிதன் தண்டிக்கப்படுகிறான். ஆனால், அவை மனிதனுடைய நலனுக்காக, அவனை ஒழுங்குபடுத்துவதற்கே என்றான், எலிகூ ( யோபு 33:17-30 ). பின்னும் எலிகூ "தேவன் மகா நீதிபரர்" என்றான் (யோபு 34:17 ). ஆகவே அவர் மனிதனுக்கு அநீதி இழைக்கவே மாட்டார். தேவ நீதி என்ன கேட்கிறது? பாவம் தண்டிக்கப்பட வேண்டும். இந்த தெய்வீக தண்டனையிலிருந்து தீமை செய்கிறவர்கள் தப்பித்துக்கொள்ள இருளும் உதவமுடியாது. மரணமும் துணைபுரியாது (யோபு 34:21-29 ). துன்மார்க்கரை தண்டித்து, நீதிமானை தேவன் தேற்றுவார் என்று விசுவாசிக்க வேண்டும்.

பின்னும் எலிகூ கூறினான், "இதோ, தேவன் மகத்துவமுள்ளவர். அவர் ஒருவரையும் புறக்கணியார். மன உருக்கத்திலும் அவர் மகத்துவமுள்ளவர்; அவர் துன்மார்க்கரைப் பிழைக்க ஒட்டாதிருக்கிறார். சிறுமையானவர்களின் நியாயத்தை விசாரிக்கிறார். அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல் அவர்களை ராஜாக்களோடே கூடச் சிங்காசனத்தில் ஏற்றவும், உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார்" (யோபு 36:5-7).

மனிதனைப் பொறுத்தமட்டில் தேவன் நீதியுள்ளவராகவே இருக்கிறார். வேறு எப்படியும் அந்த மகத்துவமுள்ளவர் இருக்கமுடியாதே. ஆகவே நமக்கு அநீதி இழைக்கப்பட்டதைப்போல், நியாயம் இல்லாததைப்போல் காரியங்கள் நடைபெறுவதைப் பார்த்து, நாம் அஞ்சி கலக்கமடைய வேண்டியதில்லை. தேவன் எப்பொழுதும் மனிதனுக்கு நியாயத்தையே செய்கிறவராக இருக்கிறார். ''தேவன் அநியாயஞ்செய்யாமலும், சர்வ வல்லவர் நீதியைப் புரட்டாமலும் இருக்கிறது மெய்யே" என்றான் எலிகூ (யோபு 34:12).

அடுத்தபடியாக, மனிதனிடத்தில் கீழ்படிதலை தேவன் எதிர்பார்ப்பது நியாயமா என்ற கேள்விக்கு விடை காணுவோம்.

யோபு, "நான் பாவியாயிராததினால் எனக்குப் பிரயோஜனமென்ன? பலன் என்ன?" என்று கேட்டான் (யோபு 35:3). தேவனுக்கு கீழ்படிந்தால் என்ன? அதனால் ஏதேனும் கிடைக்கிறதா, பிரயோஜனமுன்டா?. சில வேளைகளில் மனிதர் தாங்கள் செய்யும் எல்லா நல்ல காரியங்களுக்கும் தேவனிடத்திலிருந்து பாராட்டை எதிப்பார்க்கின்றனர். எலிகூ இதை நன்றாக தர்க்கம் பண்ணுகிறான். மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பது தேவனுடைய நன்மைக்காக அல்ல. ''நீர் பாவஞ்செய்தால் அதினாலே அவருக்கு என்ன நஷ்டம்? உம்முடைய மீறுதல்கள் மிகுதியானாலும், அதினாலே அவருக்கு என்ன கிடைக்கும்? அல்லது அவர் உம்முடைய கையில் என்ன லாபத்தைப் பெறுவார்? (யோபு 35:6,7).

அப்படியானால், நாம் நீதிமான்களாக ஜீவிக்கவேண்டியது, நம்முடைய சொந்த பிரயோஜனத்திற்கே! ''எனக்கு விரோதமாய் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆத்துமாவை சேதப்படுத்துகிறான் (நீதி 8:36 ) என்று தேவன் கூறுகிறார். தேவன் எப்படிப்பட்ட நீதிபரர் என்று நாம் இயற்கையைப் பார்த்தால் அறிந்துகொள்ளலாம். எலிகூ, "யோபே இதற்குச் செவிகொடும். தனித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளைத் தியானித்து பாரும் (யோபு 37:14 ) என்றான். மழை, மேகங்கள், மின்னல், இடி போன்ற இயற்கை சக்திகளின் மேல் தேவன் ஒருவரே அதிகாரமுள்ளவராக இருக்கிறார் (யோபு 36:26-37).

தேவன் மகத்துவமுள்ளவர். தேவனுடைய கிருஷ்டிகளில் ஒன்றையே ஆழமாக புரிந்துகொள்ள இயலாத நேரத்தில், சிருஷ்டி கர்த்தாவாகிய தேவனை எப்படி நாம் புரிந்து கொள்ளமுடியும்? இதை உலகத் தத்துவ ஞானிகளும் ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆகவே எலிகூவின் முடிவும், நம்முடைய முடிவும் இதுவாகத்தான் இருக்கவேண்டும். அது என்னவெனில், "சர்வ வல்லவரை நாம் கண்டுபிடிக்கக் கூடாது. அவர் வல்லமையிலும், நியாயத்திலும் பெருத்தவர். அவர் மகா நீதிபரர். அவர் ஒடுக்கமாட்டார். ஆகையால், மனுஷர் அவருக்குப் பயப்படவேண்டும். தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்க மாட்டார் (யோபு 37:23,24).

அந்த உன்னதமானவரை நாம் கண்களில் காணமுடியாவிட்டாலும், அவரைப்பற்றி அவருடைய வார்த்தைகளடங்கிய இந்த வேதாகமத்தில் அறிந்துகொள்ளலாம். தேவன் தம்முடைய சித்தத்தை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தி இருக்கிறார். தம்முடைய ஒரே பேரான குமாரன் மூலமாக அதை செயல்படுத்தினார். "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன் இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்" (எபி 1:1,2). அந்தக் குமாரனாகிய கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரை தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தும் பண்ணினார் (யோவான் 14:26). அந்த அப்போஸ்தலர்களும், பரிசுத்த ஆவியானவர் வரும்போது, "சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்படுவார்கள் என்றார்" (யோவான் 16:13).

அப்படியே கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, 50 நாட்களுக்குப் பின்பு வரும் முதல் பெந்தேகொஸ்தே நாளில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடி, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டனர். சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டு, கிறிஸ்துவின் சத்தியங்களை போதித்தும், தங்கள் நிரூபங்களில் எழுதியும் இருக்கின்றனர். அதன் தொகுப்பே நாம் காணும் புதிய ஏற்பாடு.

இதில் மனிதனுக்கு தேவையான யாவும் அடங்கி இருக்கின்றன (2பேதுரு 1:3). பவுல் கூறுகிறார், ''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோ 3:16,17).

– (தொடரும்)

# வேதாகமத்தில் நான் யார் ?

– சகோதரி பெவர்லி கிங்ஸ்லி

1. நாங்கள் மரக்கறி சாப்பிட்டும், மிகுந்த பெலனோடே இருந்தோம். நாங்கள் யார்?
2. மூன்று வேளையும் சாப்பாடு சாப்பிட மறந்தாலும், ஜெபம் செய்ய மறக்கவில்லை. நான் யார்?
3. ஒ ரு கையில் ஆயுதம், மறுகையில் சாந்து கரண்டி, நான் யார்?
4. சாப்பாட்டிற்காக என் சேஷ்டபுத்திர பாகத்தை இழந்தவன். நான் யார்?
5. உ லகத்திலே என்னைவிட ஞானத்தில், செல்வத்தில் சிறந்தவன் யாருமில்லை நான் யார்?
6. இயேசுவுக்கு நான் நண்பன். எனக்காக அவர் கண்ணீர் சிந்தினார். மார்த்தாள், மரியாளின் சகோதரனாகிய நான் யார்?
7. என் தாயும், என் பாட்டியும் என்னை விசுவாசத்திலே வளர்த்தார்கள். நான் யார்?
8. நான் மீன் பிடித்தவன். என்னை மனுஷனை பிடிப்பவனய் மாற்றினர் இயேசு. நான் யார் ?
9. இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தினேன் : நான் யார்?
10. உங்களுக்காக மனுக்கோலம் எடுத்தேன், இரத்தம் சிந்தினேன்; மரித்தேன்; உயிர்தேன்; மீண்டும் தேவனுடைய வலதுபாரிசத்திற்கு சென்று விட்டேன். நான் யார்?
11. காத்தர் என் பெலத்தை, என் தலை முடியிலே வைத்திருந்தார் . நான் யார்?
12. பாவம் என்னை இழுத்த போதும், அதை உதரி விட்டுவிட்டு ஓடினேன். நான் யார்?
13. தண்ணீரில் இருந்து எடுக்கப்பட்டதால், எனக்கு இந்த பெயர் வந்தது. நான் யார்?
14. இயேசுவின் பாதம் அருகே உட்கார்ந்து, அவர் பேசும் வார்த்தை கேட்டேன். நான் யார்?
15. இயேசு என் வீட்டிற்க்கு வந்தபோது, அவருக்காக பற்பல வேலைகளை செய்தேன். நான் யார் ?

வாலிபரே! இவைகளை கண்டுபிடித்து உடனே எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.
உங்கள் வயதை குறிப்பிடுங்கள். வயது வரம்பு 12 முதல் 30 வரை. சிறப்புப் பரிசு உண்டு.

**வாலிபரே! வேத ஆராய்ச்சி உங்கள் வாழ்வை வளமாக்கும்**

# "தீர்க்கதரிசிகள்"



சகோதிரி பவுலா பேட்ஸ்

1. என் சகோதரரே, .................... நாமத்தினலே பேசின தீர்க்கதரிசிகளைத் ............................ திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள் (யாக் : 5 :10)

2. அந்த யூதர்கள் ............................... தங்கள் ................................ கொலை செய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக்கேற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து (I தெச : 2:15),

3. இவர்கள் தரிசனக்காரரை நோக்கி: .................................. என்றும் ஞானதிருஷ்டிக்காரரை நோக்கி: ................................ எங்களுக்கு இதமான சொற்களை உரைத்து, மாயமானவைகளை திருஷ்டியுங்கள் என்றும் (ஏசாயா : 30:10),

4. காத்தர் தமது கரத்தை நீட்டி, என் ............................ தொட்டு: இதோ என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். பார், பிடுங்கவும் .......................... , ......................... கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்ஜியங்களின் மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார். (எரேமியா : 1 : 9,10).

5. தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ..................................................., தீர்க்கதரிசிக்கேற்ற ....................................... நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான் (மத் : 10 : 41)

6. அன்பு ஒருக்காலும் ஒழியாது. ........................................ஒழிந்துபோம். .................................. ஓய்ந்துப்போம். ............................. ஒழிந்துபோம். (1 கொரி 13 : 8)

**பதில்கள் :**

1. கர்த்தருடைய, துன்பம்படுதலுக்கும், நீடிய பொறுமைக்கும்
2. கர்த்தராகிய இயேசுவையும், தீர்க்கதரிசிகளையும்
3. தரிசனங் காண வேண்டாம், யதார்த்தமாய்
4. வாயைத், இடிக்கவும், அழிக்கவும்
5. ஏற்றுக்கொள்ளுகிறவன், பலனை அடைவான்
6. தீர்க்கதரிசனங்களானாலும், அந்நிய பாஷைகளானாலும், அறிவானாலும்.

# சிறுவர்க்கான கேள்விகள்



1. ஆபிரகாம் யாரை தன் மகனுக்கு பெண்பார்க்க அனுப்பினார் ?
2. ஆபிரகாமின் மகன் பெயர் என்ன ?
3. ரெபேக்காளின் தகப்பன், சகோதரன் பெயர் என்ன ?
4. ரெபேக்காள் தண்ணீர் கேட்ட பொழுது என்ன செய்தாள் ?
5. இதிலிருந்து நீங்கள் எடுத்த முடிவு என்ன ?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-04-2014**

## Gospel Through Media by World Evangelism Team

- Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :
  Every Sunday 6.45 - 7.00 a.m and Every Friday 6-00 a.m . - 6-30 a.m.
  (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431)*
- Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV
  Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m.
  and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382
- Arjunan in Tamil on Tamilan TV & Radio :
  TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m.
  Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio.
  (TAMILNADU Contact Mobile : 94435 58041)
- Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :
  Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m.
  Rakshana T.V : Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m.
  (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)
- P.R. Swamy & Douglas in Tamil on Radio :
  Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band
  of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)
- P.K. Varghese in Malayalam on JaiHind TV
  Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.
  (KERALA Contact Mobile : 94470 35465)
- Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :
  Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.
  (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# 18 எல்லாரும் அந்திய பாஷைகளைப் பேசுகிறார்களா? (1 கொரி : 12:30)

தொடர்ச்சி...

பிரியமான வாசகர்களே!

"பரிசுத்த ஆவி அன்றும் இன்றும்" எனும் தலைப்பின் கீழ் நாம் ஆராய்ந்து வரும் வேத வசனங்கள் எவ்வளவு தெளிவு என்பதை அறிவோம். ஆவிக்குரிய வரங்களைக் குறித்து விளக்கப்படுத்தும் பவுல் "எல்லாரும்" எல்லா வரங்களையும் நடப்பிக்க முடியாது என்று வாதிடுவதை பார்த்து வருகிறோம். அந்திய பாஷைகளை எல்லாரும் பேசுவதில்லை என்பதை கடந்த இரண்டு பாடங்களில் கற்றுக் கொண்டோம். தொடர்ந்து இந்த மூன்றாவது பாடத்திலும் கற்போம். வாருங்கள்.

அந்திய பாஷை வரத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் பேசப்படும் இடங்கள் மொத்தம் அவற்றில் முதல் 5 பகுதிகளைப் படித்துள்ளோம் இப்பொழுது 6 வது வசனப்பகுதி, 2கொரிந்தியர் 13-ம் அதிகாரம் அதைப் பார்ப்போம்.

அந்திய பாஷை வரமே பரிசுத்த ஆவியை பெற்றதற்கு அடையாளம் என்று சாதிப்போர், இதை கவனிக்க வேண்டும். அதிகாரம் 12 ல் அந்திய பாஷை பேசுவதாக நினைத்து தேவதூஷணம் பேசி, "இயேசு சபிக்கப்பட்டவர்" என்று சொல்லிவிடக் கூடாது என்று பவுல் எச்சரித்தார்.

மேலும் பட்டியிலிட்டு வரங்களை வரிசைப் படுத்தின பவுல், அந்திய பாஷை பேசும் வரங்களை கடைசியில் தள்ளினார். அந்திய பாஷை வரம் பிரிவினைகளையல்ல, ஒற்றுமையை உண்டாக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். ஆதலால் அந்த ஒன்பது வரங்களுக்குப் பதிலாக, முக்கிய மானதும் மேன்மையானதுமான வரத்தை நாடுங்கள் என்று பவுல் வலியுறுத்தி 12ம் அதிகாரத்தை நிறைவு செய்கிறார்.

தொடர்ந்து அதிகாரம் 13-ல், வசனம் 1-ல் அன்பே, அந்த முக்கியமான வரங்களையும் விட மேன்மையானது என்று துவங்குகிறார். ''மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கு இராவிட்டால்," தட்டும்போது செத்த ஒலியை எழுப்பும் வெண்கலத்தையும் கை தட்டுவது போலவுமே அது இருக்கும் இந்த இரண்டு ஓசைகளையும் எழுப்பும் போது கூடவே வேறு கருவி இசைக்கப்பட்டால் ஒரு இனிமையான இசையை எழுப்ப முடியும். அதே போல ''அன்பு'' சேர்க்கப்படாவிட்டால், எந்த பாஷையை பேசினாலும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. மேலும் பாஷை

பேசினவர்கள், ''மனுஷர் பேசும் பாஷைகளையே" தெளிவு படுத்துகிறார். "தூதருக் கென்று" ஒரு பாஷையுண்டா? அவர்கள் உலகத்தின் அத்தனை பாஷைகளையும் அறிந்தவர்கள். ஆகிலும் அவர்களுக்குள்ளாக பேசிக் கொள்ளும் பாஷை எதுவும் உண்டா ? திருமறை எதுவும் தெளிவாக்கவில்லை. மனுஷர்கள், தூதர் பாஷைகளை பேச முடியுமா? வாய்ப்பே இல்லை. அப்படியே தூதர் பாஷையை பேச வரம் அளிக்கப்பட்டாலும், மனுஷன் தூதர் பாஷையில் போய், அவர்களுக்கு தேவனைக் குறித்து போதிக்க வேண்டுமா? எப்போதும் தேவனுடைய சந்நிதானத்தில் துதித்துக் கொண்டிருக்கும் தூதர்களுக்கு மனுஷன் அவர்கள் பாஷையை பேசி என்னத்தை போதிப்பான்? அந்திய பாஷை அவிசுவாசிகளுக்கு முன் காட்டப்படும் அடையாளம் (1 கொரி 14:22). எந்த அவிசுவாசிக்கு தூதர் பாஷை அவசிய மாகிறது? தெரியாத மொழியை ஒருவனைக் கொண்டு பேசுவதால் எவ்வகையில் பக்தி விடுத்தியை உண்டு பண்ணக்கூடும்?



சோதனை எனும்
வெப்பத்தில் உருக விடாதபடி
ஒரு உறுதியான விசுவாசத்தை
நம்முடைய பிள்ளைகள் சுயமாக
உருவாக்கிக் கொள்ள,
நம் பிள்ளைகளுக்கு
நாம் உதவ முடியும்.

வசனம் 2-ல், அன்பில்லாத விசுவாசமோ, வச.3ல், அன்பு இல்லாத மிகுந்த தான தருமங்களோ எந்த பிரயோஜனமுமில்லை என்றார்.

வசனம் 4-7-ல் அன்பு செய்யும் குணாதிசயங்களை அறிவுறுத்துகிறார். தொடர்ந்து வச. 8-10 ல், இந்த வரங்களெல்லாம் ( அந்திய பாஷை, தீர்க்கதரிசனம், இவைகள் மூலம் ஏற்படுத்தப்படும் அறிவு ஆகியவை ) குறைவுள்ளவைகளும், ஒழிந்துபோகக் கூடியவைகளுமாகும். நிறைவாகிய வேத வசனங்கள், திருமறை பூர்த்தியாக எழுதப்பட்டு வரும்போது, குறைவான இவைகளெல்லாம் ஒழிந்து போகும் என்று பவுல் போதிக்கிறார். "நிறைவானது" என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், பரலோகமும் என்கின்றனர். அதாவது பரலோகத்தைச் சேரும் போது குறைவான இவைகள் ஒழியும் என்பது தான் பவுலின் போதனை என்கின்றனர் சிலர்.

நிறைவு எது ? பரலோகமா, வேதாகமமா? நீங்களே தெளிவான முடிவுக்கு வாருங்கள். "பரலோகமாகிய நிறைவு வரும்போது" என்று பவுல் சொல்லியிருப்பாரானால், நிறைவு வந்த பிறகும் நிலைத்திருப்பவைகளைப் பாருங்கள், ( வச.11 - 13). இங்கே குறிப்பிடப்படும் "குழந்தையாக இருந்த போது'' என்றால் என்ன? பரலோகத்துக்குப் போகும் வரை கிறிஸ்தவர்கள் அனைவரும் குழந்தைகளாக இருக்கிறார்களா? (எபி.5:12-14 ). அன்று கண்ணாடியிலே

நிழலோட்டமாய்ப் பார்ப்பதும், பிறகு முகமுகமாய்க் காண்பதும் பரலோகமா அல்லது திருமறையா? குறைவான அறிவும் அறியப்பட்டபடியே அறிவதும் பரலோகத்தைக் குறிக்கிறதா திருமறையையா? ஆழ்ந்து சிந்தித்தால் பைபிள் எழுத்து வடிவத்தில் இருக்க வில்லை. அது எழுத்து வடிவத்தில் வரும்போது அப்போஸ்தலர்கள் போதித்த வைகளை அறியப்பட்ட படியே அறிந்து கொள்ளக்கூடும்.

மேலும் "இப்பொழுது" ( வச.13 ) என்பது எப்பொழுது? "நிறைவானது" வந்துள்ள" "இப்பொழுது", அதாவது, நிறைவாகிய திருமறை வரும்போது இன்னமும் விசுவாசம் இருக்கும். இன்னும் நம்பிக்கையும், அன்பும் நிலைந்திருக்கும். திருமறை போதிப்பதால் பிதாவிலும் குமாரனிலும் விசுவாசம் வைத்திருக்கிறோம் ( ரோமர் 10:17; யோவான் 14:1 ). அந்த விசுவாசத்தால் அவரிடத்தில் அன்பு கூறுகிறோம் (1 பேதும் 1:8). நிறைவு என்பது திருமறையைக் குறிப்பிடுகிறது என்பதால், இது சாத்தியம்.

ஆனால் நிறைவு என்பது பரலோகத்தைக் குறிக்குமானால், பரலோகத்துக்குப் போய் பிதாவையும் குமாரனையும் நேருக்கு நேர் பார்ப்போம். இன்னமும் விசுவாசிக்கவோ, பரலோகத்துக்குப் போவோம் என்று நம்பிக்கையோ கொண்டிருக்குப் போவதில்லை. ''...காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்ப வேண்டுவதென்ன?" என்று பவுல் கேட்டார் (ரோமர் 8:24 ). இவைகளில் அன்பே பெரிது.

ஆக தேவையற்ற உளறுதலை அந்திய பாசை என்று சொல்லி ஏமாறாமல் ( ஏமாற்றாமல் ), அதினால் மேலும் மேலும் பிரிவினைக்கு வழி வகுக்காமல் அன்பினால் கட்டப்படுங்கள். ஏனெனில் அந்நிய பாஷை உட்பட அனைத்து ஆவிக்குரிய வரங்களும் குறைவுள்ளவை ஒழிந்து போகும் என்று சொல்லப்பட்டபடி கடைசி அப்போஸ்தர (யோவா) னிடம் கைகளை வைக்குதல் மூலம் வராப்களைப் பெற்றவர்களோடு ஒழிந்து போயின. நிறைவான திருமறை வந்தபோது குறைவான அந்நியபாஷை ஒழிந்துபோயிற்று, இன்னமும் ஆவிக்குரிய வரங்கள் (அந்நிய பாஷை உட்பட) இருப்பதாக நம்புவீர்களானால் வந்திருக்கிற திருமறையை (பைபிளை) நீங்கள் மதிப்பதில்லை, திருமறை மட்டுமே இன்று உலகத்தில் நிறைவானது. (சங்கீதம் 19:7). இதற்கு மிஞ்சி எண்ண வேண்டுவதில்லை (1கொரிந்தியர் 4:6), இதற்குமேல் ஒன்றைக் கூட்டவோ குறைக்கவோ கூடாத அளவுக்கு அது நிறைவு பெற்றது (வெளி. 22:18,19; யாக் 1:25). அடுத்த இதழில் 1கொரிந்தியர் 14ம் அதிகாரத்தை ஆராய்வோம்.

– தொடரும்

**இ.ஏ.ஆறுமுகம்** (போதகர்)
திண்டுக்கல்.

# வாலிப பிராயத்தில் சத்தியத்தில் வேரூன்றுதல்

## Keeping Youth Grounded in the Truth

வாலிபர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டுவிடும் தீவிரமான காலம் எது தெரியுமா? அவர்கள் முதல் முறையாக எப்போது பள்ளி ( மேல்நிலை ) மற்றும் கல்லூரிக்கு வீட்டைவிட்டு செல்கிறார்களோ அப்போது தான். சிலர் தங்கள் விசுவாசத்தை முற்றிலுமாக இழந்துவிடாவிட்டாலும், அவர்கள் வீடுதிரும்பிய பின் தங்கள் நம்பிக்கை காணாமல் போயிருப்பதை யதார்த்தமாக காணமுடியும். சில வாலிபர்களுக்கு தான், அவர்கள் வீட்டைவிட்டு வெளியே சென்றபின் அவர்களுடைய விசுவாசம் உறுதியடைந்து, அவர்களுடைய வேரானது தேவனுடைய வார்த்தையில் ஆழமாக பதிந்துவிடுகிறது. சரி, நம்முடைய வாலிபர்களை எவ்வாறு சத்தியத்தில் வேரூன்றச் செய்வது ?

பெற்றோராகிய நாம் நினைவில் வைக்க வேண்டியது என்னவெனில், நாம் நமக்கு பிள்ளைகளின் ஆத்துமாவிற்கான ஒரு போரில் ஈடுபட்டுள்ளோம். மேலும், இப்போரில் நம்முடைய எதிரான சக்தி வலிமையானதாக இருப்பதினால், நாம் இப்போரை தனியாக வெல்ல முடியாது.

சாத்தானும், இவ்வுலகத்தின் இச்சைகளும் மிகவும் வலியனவாக இருப்பதினால், நம்முடைய பிள்ளைகளை காக்க நாம் உறுதியுடன் இருக்க முடிவதில்லை. ஆகையினால் முதலாவதாக நாம், நம் பிள்ளைகளின் ஆத்துமாவை காக்க தேவனுடைய பாதுகாப்பை நம்ப வேண்டும்; மேலும் அவர்கள் ஆன்மாவை பத்திரமாக வைக்க ஆண்டவருடைய தலையீட்டை நாம் இறைஞ்சிக் ( ஜெபத்தில் ) கேட்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஆண்டவருடைய காரியங்களில் நம்முடைய பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்களும் பயிற்சியும் அளிக்க வேண்டிய, தேவன் கொடுத்துள்ள பொறுப்பும்கூட நமக்கு உண்டு ( எபே. 6:4 ). ஆகையினால், நம்முடைய பிள்ளைகள் இந்த உலகத்துடனும் சாத்தானுடனும் போர் செய்ய ஆயத்தப்படும்படி, நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

சோதனை எனும் வெப்பத்தில் உருக விடாதபடி ஒரு உறுதியான விசுவாசத்தை நம்முடைய பிள்ளைகள் சுயமாக உருவாக்கிக் கொள்ள, நாம் எவ்வாறு நம் பிள்ளைகட்டு உதவ முடியும்?

## தானியேலின் முன்மாதிரி:–

தன் சொந்த இடத்தைவிட்டு வெகுதூரம் போயினும், தொடர்ந்து தேவன் மீது தன் விசுவாசத்தை வைத்த ஒரு அருமையான வாலிபன், தானியேல். வசனத்தில் இருந்து தானியேலின் குடும்பத்தைப் பற்றி நாம் ஒன்றும் அறியாவிட்டாலும், தானியேலின் வாழ்க்கையை நாம் படிக்கும்போது, அவனுடைய சிறு மற்றும் இளமை பிராயத்திலே அவனுக்குள் பதியவைக்கப்பட்ட பாடங்கள் மற்றும் நற்குணங்களை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.



பெற்றோராகிய நாம் நினைவில் வைக்க வேண்டியது என்னவெனில், நாம் நம்முடைய பிள்ளைகளின் ஆத்துமாவிற்கான ஒரு போரில் ஈடுபட்டுள்ளோம்.

தானியேலின் வாலிப நாட்களில், அவனுடைய தாய்நாடான யூதேயா, பாபிலோனிய படைகளால் சிறைபிடிக்கப்பட்டு, தானியேலை சுமார் 900 மைல்களுக்கு அப்பால் பாபிலோனில் வாழும்படி கைதியாக கொண்டுபோய்விட்டனர். பாருங்கள்! அவனுக்கு பழக்கமான (பரிட்சயமான) அனைத்தையுமே அவன் விட்டுவிட வேண்டியிருந்தது. பாபிலோனிய மக்கள் பேசிய பாஷை வித்தியாசமானது. மேலும், பாபிலோனியர்கள் பாகால் கூட்டத்தினர்; அவர்களுக்கு மெய்யான தேவன் மீது நம்பிக்கை இல்லை. மேலும், அங்கு தானியேலுக்கு அவனுடைய குடும்பத்தினாரின் பாதுகாப்பும், உதவியும் இல்லை.

ஆனாலும் தானியேல், தன் தாய்நாட்டில் இருந்து தன்னுடன் வந்திருந்த சில வாலிபர்களுடன் நட்பை உருவாக்கி இருந்தான். அதுமட்டுமே அவனுக்கு அவனுடைய தாய்நாட்டை நினைவு படுத்தியது. இந்த அந்நிய நாட்டில் உயிர் பிழைப்பதற்காக, பாபிலோனிய வழிமுறைகள் மற்றும் நம்பிக்கைகளுடன் ஒத்துப்போக தானியேலுக்கு சோதனை ( நிர்பந்தம் ) அதிகமாக இருந்திருக்கும்.

பாருங்கள் பிரியமானவர்களே !

நம்முடைய வாலிபர்களும் தங்களுடைய கல்லூரிக்கோ, வேலைக்கோ வீட்டைவிட்டு செல்லும்போது இப்படிப்பட்ட தானியேலின் சூழ்நிலையை தான் அவர்களும் சந்திப்பார்கள். நம் வாலிப பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியே சென்றவுடன் அவர்களுக்கு குடும்பத்தின் பாதுகாப்பும், உதவியும் கிடைப்பதில்லை. மேலும், நம்பிள்ளைகள், தங்கள் நடக்கை மற்றும் நம்பிக்கையில் தேவனற்ற பிள்ளைகளால் மேற்கொள்ளப்படுகிறார்கள்.

அவர்களுக்கு விசுவாசத்தை ஊட்டிய ஆவிக்குரிய குடும்பம் மற்றும் அவர்களது ஆவிக்குரிய வழிநடத்துநர்களிடம் இருந்து அவர்கள் தூரமாயிருந்தனர். பரிதாபம் என்னவெனில், நம்முடைய வாலிபர்களில் அநேகர் தங்களுக்குரிய அறையில் தங்களுக்கு தேவையான பொருட்களை பத்திரப்படுத்தி ஆயத்தப்படுத்தி வைப்பதில் காட்டுகிற கவனத்தை, தங்களுடைய விசுவாசத்தை ஆயத்தப்படுத்துவதில் காண்பிப்பதில்லை. வாலிபர்கள், தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை என்பது, படிக்கும் இடத்திற்கோ, வேலை பார்க்கும் இடத்திற்கோ அல்லது நண்பர்களுடன் இருக்கும்போதோ விரிவுப்படுத்த வேண்டிய ஒன்று இல்லை, என நினைகின்றனர்.

**தானியேலை வழிநடத்திய கொள்கைகள்:**

தானியேல் தன்னுடைய வீட்டில் எவ்வாறு பயிற்சி பெற்றிருப்பார் என்பதைக் குறித்து நாம் நிறைய விஷயங்களை ஆராய விரும்புவோம். உண்மையிலேயே, பாகால் வணக்கம் நிறைந்த ஒரு நாட்டிலே தன்னுடைய மெய்யான தேவனுக்காக உறுதியுடன் நிற்பதற்கான ஆவிக்குரிய பெலனை பயிற்சியின் மூலமே தானியேல் பெற்றிருக்க வேண்டும்.

அவர் பெற்ற பயிற்சியைப் பற்றி நாம், அவருடைய தீர்மானங்களையும் செயல்களையும் வைத்து நாம் தெரிந்து கொள்ள முடியும். இந்த முக்கியமான பாடங்களை, தானியேல் தான் பாபிலோனுக்கு சிறைப்பிடித்து கொண்டுபோகும் முன்னமே அறிந்திருக்க வேண்டும் :

❖ தேவன் எல்லாவற்றிற்கும் மேலானவர் ; மேலும் நாம் மனிதனுடைய அறிவுரைகளுக்கு பதிலாக அவருடைய கட்டளைகளையே பின்பற்ற வேண்டும் (தானி.1;16).

- முழு உலகமும் ஒரு மாற்று திசையில் சென்றாலும், தேவனுடைய வழியே மிகவும் சரியானது (தானி. 1; 6).

- சுய நலமான இலக்குகள் பெருமையையும், தேவனிடத்தில் இருந்து பிரிவையும் உண்டுபண்ணும் (தானி. 2).

- பிரச்சனைகளுக்கான சரியான பதிற்செயல் ( response ) தேவனிடத்தில் ஜெயம் செய்வதே ஆகும் (தானி. 2 ; 9).

- நமக்காகவும், நம்முடனும் ஜெபம் செய்யக்கூடிய நண்பர்கள் நமக்கு தேவை (தானி. 2).

- நாம் பெற்றுள்ள எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும், நாம் தேவனுக்கு நன்றியும், துதியும் செலுத்த வேண்டும்(தானி.2;9).



NjtDila
thh;j;i jahy; jhd;
vd;id khwW KbAk;
Mifahy;mjwF vd;id ehd;
KOikahf xgGnfhLggJ
jhd;kde;j|UkGjy;

- நம்முடைய எல்லா வெற்றிக்குமான பெருமையும், துதியும் தேவன் ஒருவருக்கே சேரும். நாம் அவருடைய கட்டளைகளுக்கு தாழ்மையாக கீழ்படிந்து, நம்முடைய சாதனைக்காக சுய பெருமைபட கூடாது (தானி. 2 ; 4; 6).

- நாம் பாவம் செய்யும்போது அவற்றை அறிக்கைசெய்து, மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பை பெறும்படி ஜெபிக்க வேண்டும் (தானியேல் 4 ; 9).

- தேவனிடத்தில் ஜெபம் செய்வது என்பது தொடர் நிகழ்வாக, தேவ பிள்ளைகளின் வாழ்வில் தினசரி செயலாக இருக்க வேண்டும் (தானி.6).

- மேலும், விசுவாசம் சம்பந்தபட்ட விஷயங்களை - புகழை சம்பாதிக்கவோ, துன்பத்தை தவிர்பதற்காகவோ நாம் ஒத்துப்போக செய்யக் கூடாது (தானி. 6).

இப்படிப்பட்ட கொள்கைகளே தானியேலை, அவன் தன் சொந்த நாட்டைவிட்டு தூரமாக, பாகால் வணக்கத்திற்குரிய இடத்தில் இருந்திருந்தாலும், சத்தியத்தில்

வேரூன்றச் செய்தது. தானியேல் சிறைப்பட்டுப்போகும் முன், அவன் வீட்டில் எடுத்த பயிற்சியைப் பற்றி நமக்கு தெரியாவிட்டாலும், அந்த காலத்தில் தானியேல் சொந்த நாட்டின் நிலையைப் பற்றி நமக்கு கொஞ்சம் தெரிந்து கொள்ள முடிகிறது.

தானியேலும் கூட தன்னுடைய சொந்த நாட்டிலேயே, தேவனுடைய வழியா? அல்லது செல்வாக்குள்ள உலகத்து வழியா? என்ற இரண்டு நிலையையுமே சந்தித்த அனுபவம் நிறைந்த வாலிபனாயிருந்தான். மேலும், தானியேல் தான் பாபிலோனிய சிறைபிடித்தலின்போது கடைபிடித்த கொள்கைகளையே, தன்னுடைய குடும்பத்தில் (சொந்த நாட்டிலிருந்தபோது) கடைபிடித்திருந்தான். அப்படியானால், தானியேலின் முன்மாதிரியிலிருந்து வாலிபர்களாகிய நாம் கற்றுக்கொள்ள வேண்டிய குடும்ப-பயிற்சிகள் சிலவற்றை கவனிப்போம். அதாவது நாம் நம்முடைய பிள்ளைகள் ஜீவனுக்காக சத்தியத்தில் வேரூன்ற எப்படி உதவ முடியும்?

**இன்றைய வாலிபர்களுக்கான குடும்ப-பயிற்சி திட்டம்**

ஒவ்வொரு முடிவின் போதும் தேவன் எதை விரும்புவார் என கேளுங்கள். சரியான பாதையை அறியவும் ஞானமாக நடக்கவும் பைபிளிடம் செல்லுங்கள். தினந்தோறும் தொடர்ச்சியாக தேவனுடன் நடக்கத்தக்கதாக ஜெபத்திலும் வசனத்தை படிப்பதிலும் முன்மாதிரியாயிருங்கள்.

வீட்டிலிருக்கையில் அடிக்கடி, உலகத்துடன் ஒத்துப்போகக் கூடாது என்பதைப் பற்றி பேசி, பயிற்சி செய்யுங்கள். மேலும் உலக செல்வாக்கை விரும்பாமல் தேவனை தெரிந்து கொண்ட வேதாகம வீரர்களைப் பற்றி பேசுங்கள்.

உங்கள் பிள்ளைகள் பரலோகத்திற்கு செல்ல உதவக் கூடிய ஆவிக்குரிய நண்பர்களை அவர்கள் தேர்வுச்செய்யும்படி அவர்களுக்கு பயிற்சி கொடுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு தாழ்மையின் ஆவியைக் காத்துக்கொள்ள கற்றுக் கொடுங்கள். மேலும் அவர்கள் தேவன் மீது சார்ந்திருக்கவும் பழக்குங்கள். அப்பொழுதுதான், அவர்கள் வாழ்வில் புயல் வரும்போது, உலகத்தின் பொய்யான வாக்குறுதிகளை நம்புவதற்கு பதிலாக தேவனிடம் ஓடி வருவார்கள்.

- **கிங்ஸ்லிராஜா** (தமிழில்)

வாசகர்களுக்கான சிறப்புப் போட்டி

# 100 கேள்விகள் 1000 பரிசுகள்

## விடைகள்

### பாடம் 1 – பைபிள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. இ | 3. இ | 4. ஆ | 5. அ |
| 6. இ | 7. இ | 8. அ | 9. ஆ | 10. ஆ |

### பாடம் 2 – சிருஷ்டிப்பு – மனிதன்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அ | 2. இ | 3. அ | 4. இ | 5. அ |
| 6. ஆ | 7. இ | 8. இ, ஆ | 9. அ | 10. இ |

### பாடம் 3 – பிதா, குமாரன், பரிசுத்த ஆவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அ | 2. ஆ | 3. அ | 4. இ | 5. அ |
| 6. ஆ | 7. இ | 8. ஆ | 9. அ | 10. இ |

### பாடம் 4 – நியாயப்பிரமாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. அ | 3. அ | 4. ஆ | 5. ஆ |
| 6. ஆ | 7. இ | 8. ஆ | 9. ஆ | 10. ஆ |

### பாடம் 5 – பாவம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. இ | 3. ஆ | 4. இ | 5. அ |
| 6. அ | 7. ஆ | 8. அ | 9. இ | 10. அ |

### பாடம் 6 – இரட்சிப்பு – திருமுழுக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அ | 2. இ | 3. ஆ | 4. ஆ | 5. ஆ |
| 6. இ | 7. அ | 8. இ | 9. ஆ | 10. அ |

### பாடம் 7 – சபை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. இ | 3. இ | 4. இ | 5. அ |
| 6. அ | 7. ஆ | 8. அ | 9. இ | 10. ஆ |

### பாடம் 8 – தொழுகை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. இ | 3. ஆ | 4. அ | 5. அ |
| 6. அ | 7. அ | 8. அ | 9. ஆ | 10. இ |

### பாடம் 9 – கிறிஸ்தவ வாழ்க்கை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. இ | 3. அ | 4. இ | 5. அ |
| 6. அ | 7. அ | 8. ஆ | 9. அ | 10. இ |

### பாடம் 10 – நியாயத்தீர்ப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. இ | 3. அ | 4. இ | 5. இ |
| 6. இ | 7. அ | 8. இ | 9. அ | 10. இ |

# 1 ரெபெக்காள்

ஹாய் குட்டீஸ், இந்த மாதம் ரெபெக்காள் என்ற அக்காவை பத்தி தெரிஞ்சுக்குவோமா?

ஆபிரகாம் பத்தி உங்களுக்கு ஏற்கனவே தெரியும்னு நினைக்கிறேன். அவருடைய பையன் தான் ஈசாக்குனு நமக்கு நல்லாவே தெரியும். ஆபிரகாம் அவருடைய பையன் ஈசாக்குக்கு கல்யாணம் பண்ண, பெண் பார்க்கும்படி தன்னுடைய வேலைக்காரனை, தன் சொந்த தேசத்திற்கு அனுப்பினார்.

அந்த வேலைக்காரன் தன்னோடு ஒட்டகங்களையும், அவர் பார்க்கப் போகிற பெண்ணுக்கு போட வேண்டிய நகைகளையும் எடுத்துட்டுப் கோனாரு அவர் தன் எஜனமானாகிய ஆபிரகாமுடைய ஊருக்கு வெளியே இருக்கிற கிணத்துக்கு பக்கத்திலே



நின்னு, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனே, நான் தாகத்திற்கு தண்ணீர் தா என்று கேட்டால். நீயும் குடி, உன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் தருகிறேன் என்று சொல்லும் பெண்ணே என் எஜமானுடைய மகனுக்கு மனைவியென்று நான் கண்டுப்பிடிக்க உதவி செய்யும் என்று வேண்டினான்.

அது சாயங்கால வேளையாயிருந்தது. பொதுவாக பெண்கள் அந்த நேரத்தில் தண்ணீர் எடுக்க வருவார்கள். அப்போ

அங்கே தண்ணீர் எடுக்க ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோருடைய மகனாகிய பெத்துவேலின் மகள் ரெபேக்காள்ன்ற பெண் தண்ணீர் எடுக்க வந்தாள்.

அந்த வேலைக்காரன் அந்த அக்காவிடம் குடிக்க தண்ணீர் வேண்டும் என்று கேட்டான். உடனே அந்த அக்கா அவனுக்கு தண்ணீர் கொடுத்தாள். பிறகு அந்த வேலைக்காரனின் பத்து ஒட்டகங்களுக்கும் கிணற்றிலிருந்து தண்ணீர் மோண்டு கொடுத்தாங்க.

அந்த வேலைக்காரன், அந்த அக்கவுடனே அவுங்க வீட்டுக்கு போய், அந்த அக்காவின் அப்பா மற்றும்

அண்ணனுடனே எல்லாவற்றையும் பேசி, அவர்கள் சம்மதத்துடன் அந்த அக்காவை தன் எஜமானுடைய மகனாகிய ஈசாக்குக்கு மனைவியாக கூட்டிக்கொண்டு போனான்.

அந்த அக்காவை பார்த்திங்களா? குட்டீஸ் அந்த அண்ணனோட தாகத்தை மட்டுமல்ல, அவ்ரோட 10 ஒட்டகங்களுக்கும் தண்ணீர் மோண்டு கொடுத்தாங்க ஒடு ஒட்டகம் சுமார் 10 குடம் தண்ணீர் குடிக்கும்னு வைத்தாலும், அந்த அக்கா 100 குடத்துக்கு மேலே தண்ணீர் மொண்டு கொடுத்திருக்காங்க பார்த்தீங்களா ! நீங்களும் சோம்பேறிதனம் இல்லாமல் அப்பா, அம்மா சொல்லும் வேலையை தானாக, ஆசையாக செய்யுங்க அவுங்க சாப்பிடும் போது தண்ணீர் எடுத்து கொடுங்கள் இந்த மாதிரி உங்களால முடிஞ்ச எல்லா உதவிகளையும் மத்தவங்களுக்கு செய்யுங்க குட்டீஸ்.! தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

**– குயினி பிலேமோன்.**

## இம்மாதக் கேள்விகள் ?

1. யோவன் ஸ்நானகன் எதற்கு ஏற்ற கனிகளை கொடுங்கள் என்றார் ?
2. இயேசு எப்படி பிரசங்கிக்க தொடங்கினார் ?
3. பாவிகளை மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றவர் யார் ?
4. மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் என்ன ஆவர்கள் என்றார் இயேசு?
5. இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலன் எது ?
6. எதினிமித்தம் தேவதுதருக்கு முன்பாக சந்தோஷமுண்டாக இருக்கும் ?
7. ஆத்துமாவை உயிர்பிக்கிறதும், பேதையை ஞானியாக்குவதும் எது ?
8. பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவஞ்செய்தேன் என வாசிப்பதெங்கே ?
9. இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலன் எது ?
10. சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பது எது ?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-04-2014**

அனுப்ப வேண்டிய முகவரி :

சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

1. 1 ராஜா 12:13, 2நாளா 10:13
2. சங் 119:9
3. சங் 148:12
4. நீதி 1:4
5. நீதி 20:29
6. பிர 11:9
7. பிர 12:1,7
8. மத் 19:12
9. 1 யோவான் 2:13,14
10. பிர 11:10,

## பிப்ரவரி மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. J. வினித்தா சென் – சேலம்
2. S.ஜெயராஜ் – கோவை
3. M. அரவிந்த் – கோவை
4. J. மோசஸ் ஜெயக்குமார் – மதுரை
5. S. பிளாரன்ஸ் – சென்னை
6. மல்லிகா – மதுரை
7. J. சாரோன் – சென்னை
8. J. சாமுவேல் – சென்னை
9. D. பியூலா – சென்னை
10. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
11. S. அருனால்டு – சென்னை

## பிப்ரவரி மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
2. Mrs. மேரி ராஜ் – மதுரை
3. Mrs. ஞானசிரோன்மணி –சமயநல்லூர்
4. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
5. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
6. Mrs. S. செல்வி ஜான்ரோஸ் – நாகர்கோவில்
7. Mrs. ஜோன் வேதநாயகம் – நெல்லை
8. மேரி சரோஜினி – கோவை
9. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
10. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு –செங்கற்பட்டு
11. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
12. G. பீட்டர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
13. Mrs. லாரா ரத்தினராஜ் – தூத்துக்குடி
14. Mrs. J. கஸ்தூரி கலாவதி – மதுரை
15. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
16. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
17. Mrs. அன்பு சுதந்திரம் – நெல்லை
18. Mrs. விக்டோரியா ஆசீர் – சென்னை
19. E. கார்த்திக் ராஜா – ஒத்தக்கடை
20. J. ஜோசப் – தூத்துக்குடி
21. A. பிரியா தெரசா – ஒத்தக்கடை
22. A. கௌசல்யா – ஒத்தக்கடை
23. V. சுகந்தி – ஒத்தக்கடை
24. V. அஜித்தா – ஒத்தக்கடை
25. Mrs. பியூலா தாஸ் – சென்னை
26. Mrs. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
27. Sis. ராஜம்மாள் – திருப்பூர்
28. Mrs. வைஸ்லைட் துரைராஜ் – திருச்சி
29. Mrs. ஹெலன் திலக் – சென்னை
30. M. வசந்தா கனேசரேத் – ஆம்பூர்
31. Mrs.G.சிந்தனை மலர் – ஆம்பூர்
32. Mrs. ஹெப்ஸியா தாமஸ் – சென்னை
33. Mrs. புஸ்பா பாலன் – பெங்களூர்
34. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
35. இரா. எத்திராசன் – சங்கரி
36. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
37. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
38. N. ஞானசுந்தரி நாகராஜன் – நெல்லை
39. A. சந்திரா – மதுரை
40. G. புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
41. S. பாக்கியமேரி அமுதா – நெல்லை
42. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
43. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
44. B. பிரியங்கா – தூத்துக்குடி
45. P. எலிசபெத் – திருச்சி
46. Mr.I. அலெக்சாண்டர் சாலமோன் –சிவகங்கை
47. S. ஜெயராஜ் – கோவை
48. Mrs. கேற்றி செல்லத்துரை – சென்னை
49. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் – சென்னை
50. Mrs. ஆனந்த கதிரோன் – சென்னை
51. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
52. Mrs. நிர்மலா இம்மானுவேல் – சென்னை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# பிப்ரவரி & மார்ச் மாத ஊழியங்கள்




வேலூர் காட்பாடியில் திருமுழுக்கில் வசனத்திற்கு கீழ்படிந்த சகோதரி தேவகி (டிவி நேயர்)




வில்லியனூர் கிறிஸ்துவின் சபையில் ஆண்டுவிழா கூட்டத்தில் நமது ஆசிரியர் மற்றும் சகோ. பீட்டர் சாலமோன் செய்தியளித்தபோது




ஊட்டி மற்றும் திண்டுக்கல் J.C. சுவிசேஷப் பயிற்சி பள்ளி வகுப்புகளின் போது ...



மிரயலகுடா(A.P.) J.C. சுவிசேஷப் பயிற்சி பள்ளி வகுப்பு உணவு நேரத்தில்



பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் இஸ்ரவேல் நாட்டு தயாரிப்பான டாக்கிங் பைபிள்

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2001/14161
Postal Registration No. : MA/67/2012-2014
Posted at Arasaradi HPO on 10th, 11th March 2014




**If undelivered please return to :**

EDITOR
KIRUBAIYULLA VARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street,
Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421
92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online